சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP.120/2014**

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம் நாள் வியாழக்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.ராதா, எழுத்தர் நிலை 2' என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பச்சையம்மாள் | தொழில் | கூலி |
| கணவர் பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| கிராமம் | விண்ணமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**07.11.2024 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, 03.02.2014 தேதியிட்ட ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.27/2014 முதல் தகவல் அறிக்கை உண்மைநகல் **ம.சா.ஆ.1,** 03.02.2014 தேதியிட்ட ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.27/2014 வழக்கின் ராஜேந்திரன் பிரேத பரிசோதனை அறிக்கை உண்மைநகல் **ம.சா.ஆ.2,** டி.என்.25 எ.இசட் 2377 வாகனத்தின் பதிவு சான்று உண்மைநகல் **ம.சா.ஆ.3**, டி.என்.25 எ.இசட் 2377 வாகனத்தின் மோட்டார் வாகனத்தின் ஆய்வறிக்கை உண்மைநகல் **ம.சா.ஆ4**, டி.என்.25 எ.இசட் 2377 வாகனத்தின் காப்பீட்டு நகல் **ம.சா.ஆ.5**, ராஜேந்திரன் ஒட்டுனர் உரிமம் உண்மை நகல் **ம.சா.ஆ.6,** 12.03.2015 தேதியிட்ட ராஜேந்திரன்இறப்பு சான்று நகல் அ சல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டு நகல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.07.2015 தேதியிட்ட ராஜேந்திரன் வாரிசு சான்று அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டு நகல் **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாக்கல் செய்கிறேன். மனுப்படி உத்தரவாகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.